[Sri M. Bhaktavatsalam] [5th November 1966

or employment. After examining the recommendations, the Government have issued the following orders for introduction of Tamil medium in P.U.C. in one section in Humanities in all the Government Arts Colleges in this State with effect from 1966–67 :—

(*a*) In those Government Colleges which have two or more Humanities Sections in the Pre-University Course, Tamil medium should be introduced in at least one section. In other sections English will continue to be medium of instruction unless the demand for admission to the English medium sections is so limited that it is found unnecessary to continue all those sections.

(*b*) In those Government Colleges where there is only one Humanities section in the P.U.C., Tamil medium shall be introduced in that section from 1966–67. An additional Humanities section may be started in those Colleges for English medium provided that an adequate number of students are available for joining the English medium section, subject to the concurrence of the University. Otherwise, there shall be only one section in Humanities in the P.U.C. which shall be conducted in Tamil medium.

It will thus be noticed that all possible steps have been taken by this State Government for progressively introducing Tamil as the medium of instruction at the University level and that there is no failure as alleged. In the nature of things, the question has several implications and needs to be handled with care and patience. This Government would take appropriate action as and when the Government of India consult us regarding the holding of Union Public Service Commission Examinations in the regional languages.

III. ANNOUNCEMENT—*cont.*

(2) THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966.

V. POINTS OF ORDER.

(1) NOTICE FOR CONSIDERATION OF A BILL.

* திரு. து. ப. அழகமுத்து : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். நம்முடைய சபையின் 88-வது விதியின்படி ஒரு மசோதா இந்தச் சபையில் அறிமுகப் படுத்தப்பட வேண்டுமென்றால் ஐந்து நாட்களுக்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி அறிமுகப்படுத்தியதை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் 95-வது விதியின்படி ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும். உங்களுடைய அனுமதியின் பேரில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றாலும், 3-ம் தேதிதான்

5th November 1966] [திரு. து. ப. அழகமுத்து]

தொல்பொருள் பாதுகாப்பு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நேற்றுத்தான் பில் காப்பிகள் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதிலே 40 கிளாஸ்கள் இருக்கின்றன. அதை இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது உறுப்பினர்களுக்குச் சவுகரியமாக இருக்காது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன என்று சபாநாயகர் அவர்களே வருத்தப்பட்டிருக்கிறுர்கள். ஆகவே, இந்த மசோதாவை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் 3-ம் தேதி அல்லது 9-ம் தேதி எடுத்துக் கொண்டால் உறுப்பினர்களுக்குச் சௌகரியமாக இருக்கும்.

Mr. SPEAKER: This is not a point of order. But if the hon. Member feels that there is any inconvenience, I have no objection to postpone the consideration of this Bill to some other day. Now, what does the Hon. Chief Minister say in respect of this matter?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த மத்திய சட்டம் ஒன்று இருக்கிறது—பழைமையான சின்னங்கள், மான்யுமென்ட்ஸ் ஆகியவற்றை பாதுகாக்கும் சட்டம். அந்தச் சட்டம் அப்படியே இங்கே கொண்டு வரப்படுகிறது. மாநிலத்திலே தனியான சட்டம் இல்லாத காரணத்தால், பழைய மான்யுமென்ட்ஸைப் பாதுகாப்பது பலன் தரக்கூடியது என்ற வகையில் இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே அபிப்பிராய பேதங்கள் உள்ள விஷயங்கள் இல்லை.

விதிப்படி இவ்வளவு நாட்கள் அவகாசம் வேண்டுமென்று இருந்தாலும், தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. தாங்கள் இதைக் கவனித்துத்தான் இந்த மசோதாவை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு அனுமதித்திருக்கிறீர்கள். இந்த மசோதாவை தள்ளிப்போடுவது நல்லதல்ல என்றுதான் நான் சொல்கிறேன். சில மான்யுமென்ட்ஸ் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. இப்போதுள்ள மத்திய அரசாங்கச் சட்டம் போதாது. நீண்ட காலமாக அந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. பல நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதை யொட்டித்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆகவே, இதை இப்போது எடுத்துக் கொள்வதை ஆட்சேபிக்க வேண்டாமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த மசோதா, சட்ட திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி போதுமான அளவு அவகாசத்தில் வைக்கப்படவில்லை என்பதை உணரத்தான் வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னுலும் கூட பல மசோதாக்கள் வரும்போது, அவை காலத் தாழ்வோடு வருகிறபோது சட்டதிட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடியுள்ள காலத்திற்கு முன்னுல் தரவேண்டுமென்று தாங்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போதும் போதுமான அவகாசம் இல்லை என்று உணருவதில் தவறு இல்லை. இருந்தாலும் கூட வேறு வழியில்லை என்ற நிலைமையிலே 7, 8 தேதிகளில் நாம் வேறு பல பிரச்னைகளை ஆராய

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th November 1966

வேண்டியிருப்பதால், போதுமான அளவு அவகாசம் இல்லாமல் காலத்தாழ்வோடு இது கொண்டுவரப்பட்டிருப்பது வருந்தத் தக்கதுதான் என்றாலும் வேறு வழி இல்லை என்ற அடிப்படையில் இன்றே இதை எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்து இதை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக் கொண்டதால் எனக்கு ஒரு சங்கடம் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தின் நோக்கத்தையோ, அவசியத்தையோ யாரும் ஆட்சேபிக்கவில்லை. நானும் வரவேற்கிறேன். ஆனால் அங்கத்தினர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுத்தால் படித்துப் பல யோசனைகள்வரும்போது சட்டம் இன்னும் சிறப்பாக இருக்க முடியும் என்பது என் கருத்து. ஆகவே, இன்று பொது விவாதத்தை வைத்துக் கொண்டு பிறகு செலெக்ட் கமிட்டி ஒன்று அமைத்து நாளை ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால் ஒரு நான்கு மணி நேரம் உட்கார்ந்து பரிசீலனை செய்துவிட்டு செவ்வாய் கிழமை அல்லது புதன் கிழமை அன்று பிரிவு பிரிவாக பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம் என்ற என் யோசனையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The rule requires two days' notice. The Bill was given yesterday morning and we are taking it to-day. If the Members insist that the rule should be followed, we can take it up on Monday.

VI. GOVERNMENT BILL.

THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966 (L.A. BILL NO. 18 OF 1966).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966[a] (L.A. Bill No. 18 of 1966) be taken into consideration."

Under entry 12 of List II of the Seventh Schedule to the Constitution, Ancient and Historical Monuments other than those declared by or under law made by Parliament to be of national importance are the concern of the State Government. Under entry 40 in List III of the Seventh Schedule of the Constitution, Archaeological Sites and Remains other than those declared by or under law by Parliament to be of National importance are in the concurrent field. The Government of India are precluded from exercising any control over Ancient and Historical Monuments other than those of national importance. In the absence of any legislation by the State Government to regulate the matter, monuments belonging to this category would suffer. With a view to get

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd November 1966.